DINAMALAR 24 AUG 09



ஈஷா பவுண்டேஷன் அங்கமான 'பசுமைத்திருப்பூர் இயக்கம்' சார்பில் திருப்பூரில் 25,000 மரக்கன்றுகள் நடும் விழா நேற்று நடந்தது. துணை முதல்வர் ஸ்டாலின் முதல் மரக்கன்றை நட்டு, விழாவை துவக்கி வைத்தார். அருகில், ஈஷா பவுண்டேஷன் ஜக்கி வாசுதேவ் உட்பட பலர்.

# ஒரே நாளில் 25 ஆயிரம் மரக்கன்று நடுதல்: துணை முதல்வர் துவக்கி வைத்தார்

**திருப்பூர், ஆக. 24-**

ஈஷா பவுண்டேஷன் அங்கமான பசுமைத்திருப்பூர் இயக்கம் சார்பில், திருப்பூரில் ஒரே நாளில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் விழா நேற்று நடந்தது. முதல் மரக்கன்றை துணை முதல்வர் ஸ்டாலின் நட்டு வைத்து, நிகழ்ச்சியை துவக்கி வைத்தார்.

கோவையில் உள்ள ஈஷா பவுண்டேஷன் சார்பில் பசுமைக்கரங்கள் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தமிழகம் முழுவதும் 11.4 கோடி மரக் கன்றுகள் நட திட்டமிடப்பட்டுள்ளது. இதன் ஒரு அங்கமாக 'பசுமைத் திருப்பூர் இயக்கம்' துவக்கப் பட்டுள்ளது.

இந்த இயக்கம் சார்பில், திருப்பூரில் ஒரே நாளில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நட்டு, வரும் மூன்று ஆண்டுகளுக்கு, அவற்றை பராமரிக்கும் பொறுப்பை, பசுமை திருப்பூர் இயக்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

மரக்கன்று நடும் விழா, திருப்பூர் ரங்கசாமி செட்டியார் டவுன்ஹாலில் நேற்று துவங்கியது. துணை முதல்வர் ஸ்டாலின் முதல் மரக்கன்றை நட்டு, துவக்கி வைத்தார்.

அப்போது நிருபர்களிடம் கூறுகையில், ''சுற்றுப்புறச்சூழலை பாதுகாக்கும் வகையில் ஈஷா மரக்கன்று நடும் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இது வரவேற்கத்தக்க விஷயம்.

இது மேலும் தொடர வேண்டும். அரசு தரப்பில் தேவையான உதவிகள் செய்யப் படும்,'' என்றார்.

இரண்டாவது மரக்கன்றை ஜக்கி வாசுதேவ் நட்டார். அமைச்சர்கள் சாமிநாதன், பூங்கோதை, பொன்முடி, பழனி சாமி, கலெக்டர் சமயமூர்த்தி, மேயர் செல்வராஜ், ஏற்றுமதியாளர் சங்கத் தலைவர் சக்திவேல், நடிகர் பிரகாஷ்ராஜ், நடிகை ஸ்ரேயா, வளம் அமைப்பு கிருஷ்ணசாமி, 'சைமா' தலைவர் ஈஸ்வரன், எம்.எல்.ஏ., கோவிந்தசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

இதன்பின், பசுமை மராத்தான் ஓட்டப்பந்தயத்தை நடிகை ஸ்ரேயா துவக்கி வைத்தார். மராத்தான் ஓட்டம், டவுன் ஹாலில் இருந்து பழைய பஸ் ஸ்டாண்ட் வரை நடந்தது.

வெற்றி பெற்ற, பல்லடம் கொசவம்பாளையத்தை சேர்ந்த சசிகுமார், கோவை ஆவாரம் பாளையத்தை சேர்ந்த ஸ்ரீநிதி ஆகியோருக்கு 'டையர்ஸ் அசோசியேஷன்' தலைவர் சாமியப்பன், 'வளம்' அமைப்பு தலைவர் கிருஷ்ணசாமி பரிசு வழங்கினர்.